

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.05.2025) தலைமைச் செயலகத்தில், பால்வளத் துறை சார்பில் பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை மற்றும் ஆவின் நிறுவனத்தில் பணிபுரிந்திட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தட்டச்சர், இளநிலை செயற்பணியாளர் மற்றும் பால் அளவையாளர் நிலைIII ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 18 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில், மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைச் செயலாளர் மருத்துவர் ந.சுப்பையன், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் தலைவர் என். கௌதமன், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர்/ ஆவின் நிர்வாக இயக்குநர் ஆ. அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை கலைவாணர் அரங்க வளாகத்திலுள்ள மாநில செய்தி நிலையக் கூட்டரங்கில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மதுரை மற்றும் திருநெல்வேலி மண்டல இணை இயக்குநர்கள், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடனான பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், பட செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் ச. செல்வராஜ் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், அரசூர் கிராமத்திலுள்ள

# மலட்டாற்றில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, மே 23 -

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், அரசூர் கிராமம், கிழக்குத் தெருவில் வசித்துவரும் பழனி என்பவரின் மகள்கள் செல்வி.சிவசங்கரி (வயது 18), செல்வி.அபினயா (வயது 14) மற்றும் ராஜேந்திரன் என்பவரின் மகன் செல்வன்.ராஜேஷ் (வயது 13) ஆகிய மூவரும் நேற்று முன்தினம் (21.5.2025) காலை அரசூர் கிராமத்திலுள்ள மலட்டாற்றில் குளித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இச்சம்பவத்தில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

## காவல்துறை சார்பில் கருணை அடிப்படையில்

# 115 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மே 23-**

**காவல்துறை சார்பில் தகவல் பதிவு உதவியாளர் / காவல் நிலைய வரவேற்பாளர் பணியிடங்களுக்கு கருணை அடிப்படையில் 115 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.05.2025) தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் பணிக்காலத்தில் காலமான காவலர்களின் வாரிசுதாரர்கள் 115 நபர்களுக்கு கருணை அடிப்படையில் தகவல் பதிவு உதவியாளர் / காவல் நிலைய வரவேற்பாளர் பணியிடங்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

2021-22ஆம் ஆண்டிற்கான காவல்துறை மானியக் கோரிக்கையில், காவல் நிலையங்களுக்கு வரும் பொதுமக்களை இன்முகத்தோடு வரவேற்று அவர்களின் குறைகளை கனிவோடு கேட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திலும் வரவேற்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள். இதற்காக பல ஆண்டுகளாக காத்திருக்கும் மறைந்த காவலர்களின் வாரிசுகள் 1132 பேருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். அந்த அறிவிப்பிற்கிணங்க, கருணை அடிப்படையில் காவலர்களின் வாரிசுதாரர்கள் 115 நபர்களுக்கு தகவல் பதிவு உதவியாளர் / காவல் நிலைய வரவேற்பாளர் பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் வழங்கினார்.

இந்த அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை 41 காவல் துணை கண்காணிப்பாளர், 444 காவல் உதவி ஆய்வாளர்கள், 16,199 நிலை-II காவலர்கள், அமைச்சுப் பணியில் 472 உதவியாளர்கள், 215 இளநிலை உதவியாளர்கள், 23 தட்டச்சர்கள், 42 சுருக்கெழுத்து-தட்டச்சர்கள் ஆகிய பணியிடங்களுக்கு மொத்தம் 17,436 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை இயக்குநர் (தலைமையகம்) வினித் தேவ் வான்கேடே, காவல்துறை தலைவர் (நலன்) திருமதி. சத்திய பிரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## "மோடி அரசு மாநில ஆளுநர்களை தவறாகப் பயன்படுத்துகிறது.." என்ற

# ராகுல் காந்தியின் குரலுக்கு நன்றி! முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

புதுடெல்லி, மே 23 -

**மோடி அரசு மாநில ஆளுநர்களை தவறாக பயன்படுத்துகிறது. இது கூட்டாட்சி மீதான ஆபத்தான தாக்குதல், இதனை எதிர்க்க வேண்டும் என்று மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்கள், எட்டு மாநில முதலமைச்சர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கடிதம் எழுதியதை சுட்டிக்காட்டி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். இதற்கு நன்றி தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'ராகுல் காந்தி அவர்களின் குரலுக்கு நன்றி' என்று தனது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

மக்களவை எதிர்கட்சி தலைவரும், காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவருமான ராகுல் காந்தி தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

"இந்தியாவின் பலம் அதன் பன்முகத்தன்மையில் உள்ளது ஒவ்வொன்றும் அதன் சொந்தக் குரலைக் கொண்ட மாநிலங்களின் கூட்டுதான் ஒன்றியம்.



மோடி அரசாங்கம் மாநில ஆளுநர்களை தவறாகப் பயன்படுத்தி அந்தக் குரல்களை நசுக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைத் தடுத்து வருகிறது. இது கூட்டாட்சியின் மீதான ஆபத்தான தாக்குதல், இதை எதிர்க்க வேண்டும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ராகுல் காந்தி அவர்கள், தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்றத்தில் 14 கேள்விகள் கேட்ட, விவகாரம் தொடர்பாக 8 மாநில முதல்மந்திரிகளுக்கு எழுதிய கடிதம் தொடர்பான பதிவையும் ராகுல் காந்தி, தனது எக்ஸ் வலைதள பதிவில் பகிர்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**நன்றி தெரிவித்து முதல்வர் பதிவு!**

இந்நிலையில், "இந்தியாவின் கூட்டாட்சி உணர்வை பாதுகாப்பதில் உங்கள் குரலுக்கு நன்றி" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

அன்புள்ள சகோதரர் ராகுல் காந்தி, மாநிலங்களின் உரிமைகளையும் இந்தியாவின் கூட்டாட்சி உணர்வையும் பாதுகாப்பதில் உங்கள் குரலுக்கு நன்றி

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தரவேண்டிய ரூ.2,291 கோடி

# கல்வி நிதியை வழங்கக்கோரி தமிழ்நாடு அரசு வழக்கு!

## ஒன்றிய அரசுக்கு உத்தரவிடக்கோரி உச்சநீதிமன்றத்தில் தாக்கல்!

சென்னை, மே 23-

தமிழ்நாட்டிற்கான கல்வி நிதி, 2 ஆயிரத்து 291 கோடி ரூபாயை உடனடியாக விடுவிக்க ஒன்றிய அரசுக்கு உத்தரவிடக்கோரி, உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மனு தாக்கல் செய்துள்ளது. கல்வி நிதியை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்தது சட்ட விரோதம் என்றும் அரசியலமைப்புக்கு எதிரானது என்றும் தமிழ்நாடு அரசு கூறியுள்ளது.

இடஒதுக்கீட்டை சிதைத்து, பன்முக பண்பாட்டை தகர்த்து, சமஸ்கிருத பண்பாட்டை கட்டமைக்க முயலும் தேசியக் கல்விக்கொள்கையை ஏற்க தமிழ்நாடு அரசு மறுத்து வருகிறது. தேசிய கல்விக் கொள்கையை ஏற்காததால், தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை விடுவிக்காமல் ஒன்றிய அரசு வஞ்சித்து வருகிறது. ஒன்றிய பாஜக அரசின் இந்த காழ்ப்புணர்ச்சி நடவடிக்கைக்கு, கல்வியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தர வேண்டிய கல்வி நிதியை அரசியல் காரணங்களுக்காக விடுவிக்காமல் நிறுத்தியுள்ள ஒன்றிய அரசிற்கு எதிராக வழக்கு தொடரப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை உடனடியாக விடுவிக்க ஒன்றிய அரசுக்கு உத்தரவிடக்கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. தேசிய கல்விக் கொள்கையை செயல்படுத்தவில்லை எனக் கூறி, பிஎம்ஸ்ரீ மற்றும் சமக்ர சிக்ஷா திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய கல்வி நிதி 2 ஆயிரத்து 291 கோடி ரூபாயை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்திருப்பது சட்ட விரோதம் என மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் கல்வி திட்டம் ஏற்கனவே சிறப்பான முறையில் உள்ளது என்றும் இரு மொழி கொள்கையை தமிழ்நாடு பின்பற்றி வருகிறது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் தாய் மொழி அல்லாத மாணவர்களுக்கு மற்ற மொழிகளில் படிக்க போதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2010 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சமச்சீர் கல்வி திட்டம் மூலம் மாநிலம் முழுவதும் சமமான பாடத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதனால் தமிழ்நாட்டின் கல்வித்தரம் சிறப்பாக உயர்ந்துள்ளது என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு சட்டப்படி ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையில் தமிழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனவே, புதிய தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாட்டில் அமல்படுத்த தேவை இல்லை என்று தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசு தனது கல்வி கொள்கையை திணிக்க, நிதி விவகாரத்தை பயன்படுத்தக் கூடாது என்றும் இது போன்ற திணிப்பு என்பது மாநில சுயாட்சிக்கு எதிரானது என்றும் தமிழ்நாடு அரசு கூறியுள்ளது. அரசியல் சாசனம் வழங்கி உள்ள உரிமையின் படி மாநில அரசு சொந்த கல்வி திட்டத்தை செயல்படுத்த ஒன்றிய அரசு தடையாக இருப்பது அரசியல் அமைப்புக்கு விரோதமானது என்று மனுவில் தெரிவிக்கப்பட்டது.

ஒன்றிய அரசு கல்வி நிதி வழங்காததால் 43 லட்சத்து 94 ஆயிரம் மாணவர்கள், 2 லட்சத்து 21 ஆயிரம் ஆசிரியர்கள் மற்றும் 32 ஆயிரத்து 701 இதர பணியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கடந்த பிப்ரவரி மாதம் பிரதமருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதினார். அதற்கு ஒன்றிய அரசு அளித்த பதில் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு வழங்க வேண்டிய 2 ஆயிரத்து 151 கோடியே 59 லட்சம் ரூபாய் கல்வி நிதியும், அதற்கான ஆறு சதவீத வட்டியாக 139 கோடியே 70 லட்சம் ரூபாயும் சேர்த்து மொத்தம் 2 ஆயிரத்து 291 கோடி ரூபாய் நிதியை தமிழ்நாடு அரசுக்கு வழங்க ஒன்றிய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் எதிர்பார்க்கப்படுகிறது.



தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் மூலம் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் மற்றும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் ஆகியோர் சேலத்தில் நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன், மாவட்ட ஆட்சியர் இரா.பிருந்தாதேவி, , எஸ்.சதாசிவம் எம்.எல்.ஏ., உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு செயலாளர் அ.திவ்யநாதன், கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் க.ஜெயபாலன், துணை மேயர் மா.சாரதாதேவி, உமாராணி உட்பட தொழிலாளர் நலத்துறை அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் தொழிலாளர்கள் உள்ளனர்.



கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலகக் கூட்ட அரங்கில், கிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட 20 வார்டுகளிலும் முடிவுற்ற பணிகளின் விபரம் குறித்தும், நடைபெற்று வரும் பணிகளின் நிலை குறித்தும், செயல்படுத்தப்பட வேண்டிய திட்டப் பணிகள் குறித்துமான மண்டல ஆய்வுக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி பி.ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கோவை மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், கிழக்கு மண்டலத் தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், உதவி ஆணையர் முத்துசாமி, உதவி செயற்பொறியாளர் ராஜேஸ்கண்ணா உள்பட மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்ட கழக அலுவலகத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஜூன்1 மதுரையில் நடைபெறும் பொதுக்குழு கூட்டம் மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தனசேகர், இரா. கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா. அன்பழகன்,ரெ. சக்கரவர்த்தி, ரெங்க.முருகன், கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், இரா.அண்ணாதுரை, ப.தனவேல், தெய்வ. இளையராஜன், நா.கணேசன், பொன். செல்வம், கே.ஜி.எஸ். முருகன், இரா.செந்தில்குமார், உள்ளிட்ட நிர்வாகிகளிடம் ஆலோசனை வழங்கி உரையாற்றினார்.